Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
**Case No. CC.No.442/2025, Cr.No.88/2025, Kandili PS**
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.2, Page.No.

| | |
|---|---|
| பெயர் | சாம்ராஜ் |
| வயது | 61 |
| தந்தை/கணவர் பெயர் | கௌரன் |
| கிராமம் | பள்ளிப்பட்டு |
| மாவட்டம் | திருப்பத்தூர் |
| தொழில் | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 26th day of May 2026.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 01.10 PM

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் – 01.23 PM

**முதல் விசாரணை (எதிரி ஆஜர்)**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய மனைவி ஆவார். தேதி மாதம் நினைவில்லை. கடந்த வருடம் ஒரு நாள் இரவு 08.00 மணியளவில் நானும், எனது மருமகன், மகள் மற்றும் அ.சா.1 ஆகியோர் எங்கள் வீட்டிடம் இருந்தபோது, அங்கு Pickup வாகனத்தில் வந்த ஆஜர் எதிரி வீட்டில் இருந்த என்னை "ஆம்பளையா இருந்த வெளியே வாடா, பொட்டை மாதிரி உள்ளே இருக்காதே" என்று திட்டினார். வெளியே வந்த எங்களை அவர் வண்டியில் வைத்திருந்த கத்தியை எடுத்து "வெட்டுகிறேன் பாரு" என்று மிரட்டினார். பின்னர் காவல் துறையினருக்கு தகவல் தெரிவிக்கவே, எனது வீட்டில் இருந்து சற்று தொலைவாக அவரை அழைத்துச் சென்று அங்கிருந்து செல்லுமாறு அறிவுறுத்தினார்கள். பின்னர் எங்களை வீட்டினுள் செல்லுமாறு போலீசார் கூறினார்கள். பினன்ர் இரவு 01.00 மணியளிவல் எதிரியானவர் அவருடன் ஒருவரை அழைத்து வந்து கத்தியை கொண்டு எங்களது கேட்டின் மீது தீட்டினார். பின்னர் இதுகுறித்து மறுநாள் காலையில் காவல் நிலையத்தில் அ.சா.1 புகார்

அளித்தார். என்னிடம் காட்டப்படும் இது போன்ற கத்தியால் தான் எதிரி எங்களை மிரட்டினார். இருட்டில் பார்க்கவே இந்த கத்தி சரியாக தெரியவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

போலீசார் அங்கு இரவு சுமார் 08.00 மணியளவில் வந்து 11.00 மணி வரையில் இருந்தனர் என்றால் சரிதான். எதிரிக்கும் எங்களுக்கும் வழிப்பிரச்சனை உள்ளது என்றாலும் உரிமையியல் வழக்கு நிலுவையில் உள்ளது என்றாலும் சரிதான். 08.00 மணியிலிருந்து 11.00 மணி வரையில் போலீசார் அங்கிருந்தார்கள் என்றாலும் எங்களுக்கு அறிவுரை கூறி அனுப்பி வைத்தார்கள் என்றாலும் சரிதான். நாங்கள் வீட்டிற்குள் இருந்து கேமிராவின் மூலம் பார்த்தோம் என்றால் சரியல்ல, எட்டிப் பார்த்தோம். சம்பவம் நடந்தது இருட்டான நேரம் என்றால் லைட் இருந்தது, சரிதான்.

எதிரி தரப்பு வழக்கறிஞர் மேற்கொண்டு குறுக்கு விசாரணை செய்ய முடியாது என்று கூறியதால், குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை :– இல்லை</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

JUDICIAL MAGISTRATE NO.II

KOVENDHAN S

Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2026.05.26 18:55:31 +0530

Judicial Magistrate No.II,
Tirupathur.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
**Case No. CC.No.442/2025, Cr.No.88/2025, Kandili PS**
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.1, Page.No.

| | |
|---|---|
| பெயர் | கம்சலா |
| வயது | 53 |
| தந்தை/கணவர் பெயர் | சாம்ராஜ் |
| கிராமம் | பள்ளிப்பட்டு |
| மாவட்டம் | திருப்பத்தூர் |
| தொழில் | கூலி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 26th day of May 2026.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 12.43 PM

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் – 01.09 PM

**<u>முதல் விசாரணை</u> (எதிரி ஆஜர்)**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். தேதி மாதம் நினைவில்லை. கடந்த வருடம் ஒரு நாள் இரவு 10.30 மணியளவில் என்னுடைய வீட்டில் நான், எனது மகள், மருமகன் ஆகியோர் இருந்தபோது, என்னுடைய கணவர் காம்பவுண்டிற்கு அருகே நின்றிருந்தபோது, எதிரியானவர் "நான் என்ன பொட்டையான, ஓம்மாள ஓக்க வெளியே வாடா" என்று அசிங்கமாக பேசினார். இரவு 10.30 மணி வரையில் இவ்வாறு தான் பேசிக்கொண்டிருந்தார். பின்னர் நாங்கள் வெளியே சென்றபோது, எதிரி கையில் கத்தியை வைத்து கொண்டு மிரட்டிக்கொண்டிருந்தார். பின்னர் என்னுடைய மகன் கந்திலி காவல் நிலையத்தில் போன் மூலம் புகார் தெரிவித்தார். 2 போலீசார்கள் வீட்டிடம் வந்து விசாரித்தார்கள். பின்னர் அவர்கள் எங்களை வீட்டினுள் சென்று இருக்குமாறு கூறினார்கள். பின்னர் இரவு 01.00 மணியளவில் எதிரி வெட்டுக்கத்தியை எடுத்துக்கொண்டு வந்தார். நாங்கள் வீட்டில் இருந்து வெளியே

வரவில்லை. மறுநாள் காலை காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் வெட்டுக்கத்தியால் தான் எதிரி எங்களை மிரட்டினார். **அந்த வெட்டுக்கத்தி அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

எங்களுக்கும் எதிரிக்கும் நிலம் சம்பந்தமாக ஏற்கனவே முன்விரோதம் உள்ளது என்றால் சரிதான். உரிமையியல் வழக்கும் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எனக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் விரோதம் இல்லை என்றால் சரிதான், ஆனால் அவரின் பெற்றோரின் பேச்சைக் கேட்டு இவ்வாறு செய்து விட்டார். காவல்துறையினர் சொல்லிக்கொடுத்துதான் முதல் விசாரணையில் நான் சாட்சியமளித்தேன் என்றால் சரியல்ல. நாங்கள் காவல் நிலையம் சென்றபோது வழக்கு சொத்து கத்தியை ஒப்படைத்தோம் என்றால் சரியல்ல, எதிரி எடுத்து சென்று விட்டார். எனது மருமகள் எழுதிக் கொடுத்த புகாரில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் நான் அவரிடம் கூறியதை அவர் எழுதியதில் கையொப்பம் செய்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் கண்காணிப்பு கேமராவில் பார்த்ததை வைத்து தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல, நான் ஜன்னல் வழியாகப் பார்த்தேன். எதிரியை ஜன்னலின் வழியாகப் பார்த்ததாக போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் இல்லை. எங்களது வீட்டை தாண்டி தான் எதிரியின் வீட்டுக்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான். அது பொதுவான வழி என்றால் சரிதான். சம்பவயிடத்தில் இரவு 09.00 மணியிலிருந்து 11.00 மணி வரையில் போலீசார் இருந்தனர். அந்த நேரத்தில் எதிரியானவர் அங்கு வரவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் அப்போது வீட்டினுள் இருந்தோம் என்றால் சரியல்ல. காவல்துறையினர் எதிரியை அங்கிருந்து செல்லுமாறு அறிவுறுத்தினார்கள். எதிரியானவர் இரண்டாவது முறையாக எங்கள் வீட்டிற்கு வெளியே வந்தபோது நாங்கள் நேரடியாகப் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. காவல்துறையினர் எதிரியை கைது செய்து அழைத்துச் சென்றார்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் எங்களுக்கும் இடையே உள்ள முன்விரோதத்தின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் 2-3 தாள்களில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். என் மகன் எழுதிக்கொடுத்தப்புகாரில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

மேற்படி சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் வழக்கு சொத்தை நான் தான் காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன் என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :– இல்லை</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2026.05.26 18:55:40 +0530

Judicial Magistrate No.II,
Tirupathur.